





IPL
புலமை மையம்

தரம் 05


நேரம் :- 1 மணித்தியாலம்	வினாத்தாள் - 03 பகுதி - I	ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151
சுட்டெண் :		



01, 02 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள இடைவெளியை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான உருவை தெரிவு செய்க.

01.  I.  II.  III. 



02.  I.  II.  III. 

03, 04 ஆகிய வினாக்களில் குறைந்த தொடர்புள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

03. I.  II.  III. 

04. I.  II.  III. 

05, 06ம் வினாக்களில் கீழே தரப்பட்டுள்ள உருவப்படங்களை அவதானித்து விடை தருக.

A.  **B.**  **C.**  **D.**  **E.**  **F.** 

05. D, E என்பன ஏனையவற்றில் இருந்து வேறுபடுவதற்கு காரணமாக அமைவது

I. தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ளல்.

II. எரிபொருட் தேவையின்றி இயங்குதல்.

III. கடல் மார்க்கத்தில் பயணம் செய்தல்.

06. சில்லுகள் இல்லாத வாகனம், விஷேட சில்லைக் கொண்ட வாகனம் ஆகியவற்றின் ஆங்கில எழுத்துக்கள் முறையே கொண்ட விடை யாது?

I. E, A II. B, D III. D, A

www.ipledu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English


தரம்
01-A/L


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

07. கீழே தரப்பட்டுள்ள இரண்டு உருக்களும் ஊடுகாட்டும் தாள்கள் இரண்டில் வரையப்பட்டுள்ளன.






மேலுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று அமையுமாறு ஒரு தாளின் மீது மற்றைய தாளை வைப்பதால் கிடைக்கும் உரு யாது?


I. 


II. 

III. 

08. கீழே தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் வெற்றிடத்திற்கு பொருத்தமான விடை யாது?



I. 

II. 


III. 


09. ONE என்பதை 34 எனவும் TWO என்பதை 58 எனவும் குறித்தால் THREE என்பதை குறிக்கும் முறை யாது?

I. 56 II. 43 III. 79

10. கீழ்வரும் உருக்களில் கால்வாசிக்கு நிறந்தீட்டப்பட்ட உருவினை தெரிவு செய்க?

I. 

II. 


III. 

11. 49 கொய்யாப் பழங்களை 3 குவியல்களாக்கப்பட்டது. முதலாவது குவியலில் உள்ள பழங்களின் எண்ணிக்கையின் அரை மடங்கு பழங்கள் இரண்டாவது குவியலிலும், இரண்டாவது குவியலில் உள்ள பழங்களின் எண்ணிக்கையின் அரை மடங்கு பழங்கள் மூன்றாவது குவியலிலும் காணப்பட்டன. எனவே மூன்றாவது குவியலில் காணப்பட்ட பழங்களின் எண்ணிக்கை யாது?

I. 07 II. 09 III. 79

12. கீழுள்ள இலக்கங்கள், எழுத்துக்கள் மீது மையை பூசி எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக்கோடு வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது வருவது எது?




I. 

II.

III.

13. 2019ம் ஆண்டின் ஆரம்ப நாள் புதன்கிழமை எனின் 2021ம் ஆண்டின் கடைசி நாள் என்ன கிழமையில் வரும்?

I. ஞாயிற்றுக்கிழமை II. சனிக்கிழமை III. வெள்ளிக்கிழமை

14. 

இவ் வரிப்படத்தில் A, B ஆகியவை குறித்து நிற்பவை முறையே

I. பாம்பு, நத்தை II. பூனை, பூரான் III. அட்டை, மாடு


www.iedu.lk

15.  அருகில் உள்ள கடிகார முகம் காட்டும் நேரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது நேரம் யாதாக இருக்கும்.

I. 2.20 II. 9.40 III. 10.20


16. 1 – 25 வரையுள்ள ஒற்றை எண்களின் எண்ணிக்கையை 10 – 30 வரையுள்ள இரட்டை எண்களின் எண்ணிக்கையால் பெருக்கும் போது வருவது,

I. 132 II. 143 III. 120


17.  அருகில் உள்ள உருவில் சிறிய சதுர அடைப்புக்களில் ஒரே நிறம் ஏதோ ஒரு விதத்தில் அருகருகே வராதவாறு நிறம் தீட்டுவதற்கு குறைந்தது எத்தனை நிறங்களை பயன்படுத்த முடியும்.

I. 05 II. 04 III. 03

18, 19ம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களில் உள்ள வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணைக் தெரிவு செய்க.

18. 

I. 41 II. 27 III. 14

19. 

I. 12 II. 16 III. 09

20. வரிசையொன்றில் நின்ற நான்கு மாணவர்களில் சேகர் வரதனுக்கு வலது பக்கத்தில் நின்ற அதே வேளை குகனுக்கு இடது பக்கத்தில் நின்றான். மயூரன் வரதனுக்கும் சேகருக்கும் நடுவில் நின்றான் எனின் வரிசையில் இடது பக்கத்திலிருந்து மூன்றாவதாக நிற்பவர் யார்?

I. வரதன் II. குகன் III. சேகர்

21. வரிசையின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் நிற்போர் முறையே யாவர்?

I. வரதன், குகன் II. குகன், சேகர் III. சேகர், மயூரன்

கீழ்வரும் தகவல்களைக் கொண்டு 22, 23 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

நிசார் 4 ரூபாய், 10 ரூபாய் முத்திரைகளை வாங்குவதற்கு 100 ரூபாய் தாள்காசுடன் தபாலகம் சென்று இரு வகையான முத்திரைகளிலும் 19 முத்திரைகளை மீதிப்பணம் இல்லாது வாங்கினான்.

22. அவன் வாங்கிய 4 ரூபாய் முத்திரைகளின் எண்ணிக்கை யாது?


I. 05 II. 10 III. 15




www.ikedu.lk

23. அவன் 10 ரூபாய் முத்திரை வாங்க செலவழித்த பணம் எவ்வளவு?

I. ரூ. 60.00 II. ரூ. 40.00 III. ரூ. 70.00

24. சதுர வடிவ கடதாசி ஒன்றை அம்புக்குறி காட்டிய திசை வழியே மடித்து இறுதியில் சிறிய வட்ட வடிவ துளை இட்டு விரிக்கும் போது வரும் வடிவம் எது?




I.  II.  III. 

25. திறமையில் நம்பிக்கை எனும் கருத்தை தரும் பழமொழி எது?


I. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்


II. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்

III. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

26. 

இலக்கமிடப்பட்ட இவ்வட்டைகளைக் கொண்ட சதுரமுகி ஒன்றை ஆக்கும் போது சரியாக அமையாத உரு எது?

I.  II.  III. 

27. 

அருகில் உள்ள அட்டையில் இருந்து பக்க நீளம் 3cm உடைய எத்தனை சதுர அட்டைகளை வெட்டி எடுக்க முடியும்.

I. 09 II. 10 III. 12


28. அலங்கார மின் விளக்கு தோரணம் ஒன்றில் சிவப்பு, மஞ்சள், பச்சை நிற மின் குமிழ்கள் முறையே 3, 5, 6 ஆகிய நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒளிரும். மு.ப 8.15 இற்கு மூன்று மின்குமிழ்களும் ஒன்றாக ஒளிர்ந்ததாயின் மீண்டும் எத்தனை மணிக்கு ஒன்றாக ஒளிரும்?

I. பி.ப 8.45 II. மு.ப 9.15 III. மு.ப 8.45

29. சமிலாவினதும் அவளது அக்காவினதும் வயதுகளின் கூட்டுத் தொகை 36 வருடங்கள் ஆகும். 3 வருடங்களுக்கு முன்னர் அக்காவின் வயது சமிலாவின் வயதினைப் போல் 4 மடங்காக இருந்தது எனின் சமிலாவின் தற்போதைய வயது யாது?

I. 10 II. 09 III. 27

www.ikedu.lk

30.  இவ்வுருவில் உள்ள முக்கோணிகளினதும் சதுரங்களினதும் எண்ணிக்கை முறையே.

I. 16, 06 II. 20, 08 III. 20, 06

31. பின்வரும் தகவலை ஒழுங்கமைத்தால் சரியாக அமைவது,

I. எழுத்து, சொல், வாக்கியம், பந்தி

II. எழுத்து, சொல், பந்தி, வாக்கியம்

III. சொல், எழுத்து, வாக்கியம், பந்தி

32. பார்வதி ஓர் ஏணியில் 8வது படியில் நிற்கிறாள். அவள் இன்னும் இரண்டு படிகள் இறங்கினால் ஏணியின் நடுவில் உள்ள படியை வந்தடைவாள். எனின் ஏணியில் உள்ள படிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

I. 15 II. 13 III. 11

33. மூவிலக்க எண்ணின் மிகப்பெரிய எண்ணின் நடுவில் வரும் இலக்கத்தையும் மூவிலக்க எண்ணின் மிகச்சிறிய எண்ணின் நடுவில் வரும் இலக்கத்தையும் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண் யாது?

I. 99 II. 90 III. 101

பின்வரும் பாடலடியைக் கொண்டு 34, 35 ம் வினாக்களுக்கு விடை தருக.

சின்னஞ்சிறிய பிள்ளைகளே
சிறப்பாய் உடலில் நலம் பெறவே
எண்ணம் போல விளையாடி
உழைக்க வேண்டும் சுறுசுறுப்பாய்


34. இப்பாடல் யாரை விளித்து பாடப்பட்டுள்ளது.

I. சிறப்பாய் உழைப்பவர்களை II. சுறுசுறுப்பான பிள்ளைகளை

III. சின்னஞ்சிறிய பிள்ளைகளை

35. உடல் நலம் பெற எவ்வாறு விளையாட வேண்டும் என பாடலில் கூறப்பட்டள்ளது.

I. எண்ணம் போல II. சிறப்பாய் III. ஆரோக்கியமாய்

36. 


அருகில் உள்ள வரிப்படத்தில் A அமைந்திருப்பது Dயிற்கு தெற்கு திசையில் எனின் C அமைந்திருப்பது Aயிற்கு எத்திசையிலாகும்.

I. தென் மேற்கு II. வடகிழக்கு III. தென்கிழக்கு

37. விளையாட்டு மைதானம் ஒன்றில் 5m இடைவெளியில் கொடிக்கம்பங்கள் நடப்பட வேண்டும் எனின் குறித்த ஓர் இடத்திலிருந்து 20m வரையுள்ள தூரத்திற்கு நடுவதற்கு தேவையான கொடிக்கம்பங்கள் எத்தனை?

www.ieu.lk

I. 04 II. 05 III. 06

38. 

அருகில் தரப்பட்ட செவ்வக வடிவத் தட்டில் இருந்து நிழற்றப்பட்ட முக்கோணத் துண்டு போல் எத்தனை துண்டுகளை வெட்ட முடியும்

I. 10 II. 05 III. 20

உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றின் உள்ளே 6 சிவப்பு நிறப் பந்துகளும் 3 கறுப்பு நிறப் பந்துகளும் 4 வெள்ளை நிறப் பந்துகளும் காணப்பட்டன. இத்தகவலைக் கொண்டு 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

39. உள்ளே பார்க்காமல் ஒரு வெள்ளை நிறப் பந்தை வெளியே எடுக்க வேண்டும். எனில் குறைந்தபட்சம் எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்.

I. 09 II. 05 III. 10

40. மூன்று நிறங்களிலும் பந்துகளைப் பெற வேண்டம் எனில் குறைந்தபட்சம் எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?

I. 11 II. 08 III. 09

www.lkedu.lk

IPL
புலமை மையம்

தரம் 05

நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடம்	வினாத்தாள் - 03 பகுதி - II	ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி 0756584350, 0740769151
சுட்டெண் :		

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

வண்ணத்துபூச்சிகளின் பிரதான உணவு தேன் ஆகும். பெரும்பாலும் அவை திரவ உணவையே உட்கொள்கின்றன. சுவையை உணரும் உறுப்பு அவற்றின் கால்களில் அமைந்துள்ளன. அவை கண்களை திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இவற்றின் இறக்கைகளில் அமைந்துள்ள நரம்பு மண்டலம் இறக்கைகளுக்கு சக்தியைக் கொடுக்கிறது. உலகின் பல பகுதிகளிலும் வண்ண வண்ணத்துப் பூச்சிகள் காணப்படுகின்றன.

I. வண்ணத்துப்பூச்சியின் பிரதான உணவு எது? .....
II. இறக்கைகளுக்கு எது சக்தியை கொடுக்கிறது? .....
III. ஆகாரம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது? .....
IV. பெயரடை மொழிச்சொல் ஒன்று தருக. .....
V. அ.ஃறிணை பன்மைப் பெயர்ச்சொல் எது? .....
VI. சினைப்பெயர்சொல் ஒன்றை எழுதுக. .....

(6புள்ளிகள்)

02. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

I. பூக்கள் மலர்ந்து மணம் பரப்பின. ( )
II. தங்கையோடு நாயும் சென்றன. ( )
III. கிளிக் கூட்டம் பறந்து சென்றதைப் பார்க்க வானம் அழகாக காட்சியளித்தன. ( )

(3புள்ளிகள்)

03. கீழ்வரும் தொடர்களால் குறிப்பிடப்படும் தனிச்சொற்களை எழுதுக.

I. மாலை வேளையில் கூடும் சந்தை .....
II. அரண்மனைகளில் பெண்கள் தங்குவதற்கென அமைக்கப்படும் இடம் .....
III. வழக்கு ஒன்றை தாக்கல் செய்பவன் .....

(3புள்ளிகள்)

04. பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.

I. தோள் கொடுத்தல் - .....
II. கண்வளர்தல் - .....

(2புள்ளிகள்)

05. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

I. பிரிப்பது/ பாக்கு நீரிணை / இலங்கையையும் /ஆகும் / இந்தியாவினையும்/
.....
II. உள்ள / புளிப்பு சுவை / விற்றமின் C / காணப்படும் / பழங்களில் /அதிகமாக
.....
III. சென்று / சிறுவர்கள் / பேரூந்தில் / ஏறினார்கள் / வரிசையாகச்
.....

(3புள்ளிகள்)

www.ipledu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்

தமிழ் மொழி மூலம்



ENGLISH MEDIUM

සිංහල මාධ්‍ය

இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

06. பொருத்தமான எழுவாயை எழுதி வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

I. ..... நான்றாக பாடினீர்கள்

II. ..... வகுப்பறைக்குள் நுழைந்தார்.

III. ..... நீர்வீழ்ச்சியில் குளித்தோம் **(3புள்ளிகள்)**

07. பின்வரும் சொற்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

I. கதிரை :- .....

II. வீடு :- ..... **(2புள்ளிகள்)**

08. பின்வரும் தனிவாக்கியங்களை தொடர்வாக்கியமாக்கி எழுதுக.

சிறுவன் மைதானத்திற்கு சென்றான்

சிறுவன் பட்டம் விட்டான்

..... **(1புள்ளிகள்)**

09. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

I. கமலம் :- ..... II. துயில் :- ..... **(2புள்ளிகள்)**

10. பின்வரும் பழமொழியை பூரணப்படுத்துக.

குப்பையிலே போட்டாலும் **.....** **(1புள்ளிகள்)**

11. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.
(நீ, மரம், நீங்கள், நான், நாங்கள்)

I. முன்னிலை பன்மைச் சொல் :- .....

II. தன்மை ஒருமைச் சொல் :- ..... **(2புள்ளிகள்)**

12. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

I. Please look at the black board :- .....

II. I will sweep the room :- ..... **(2புள்ளிகள்)**

13. பின்வரும் சிங்கள வாக்கியங்களை தமிழில் எழுதுக.

I. கிரி பொன்ன :- .....

II. மேகே மில கீயத? ..... **(2புள்ளிகள்)**

14. பின்வரும் வாக்கியங்களின் சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக?

I. அப்பா வந்தாரா? .....


II. நாங்கள் விளையாடுவோம் ..... **(2புள்ளிகள்)**

சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

15. 6 4 8 9 இவ் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய

I. மிகப் பெரிய எண் யாது? .....

II. இடப்பொறுமானம் 800 இருக்கத்தக்கவாறான மிகச் சிறிய எண் யாது? .....

16. 

அருகில் காட்டப்பட்டுள்ள உருவில்

I. நிழற்றிய பகுதியைப் பின்னமாகத் தருக .....


II. 0.5 பகுதியை நிழற்றுவதற்கு இன்னும் எத்தனை துண்டங்கள் நிழற்றவேண்டும். .....

www.lkedu.lk

17. பேருந்து ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வவுனியாவைச் சென்றடைவதற்கு 5 மணித்தியாலங்கள் எடுத்தது. பயண நேரத்தைத் தவிர தரித்து நின்ற இடங்களில் 90 நிமிடங்கள் செலவாகியது எனின் பேருந்தின் பயணத்திற்கான நேரம் யாது? ……..

18. நீர்த்தாங்கியொன்று 6000*l* கொள்ளளவை உடையது இதிலிருந்து 2000*l* நீர் வெறியேற்றப்பட்ட பின்னர் தாங்கியை முற்றாக நிரப்ப 4500*l* நீர் தேவைப்பட்டதெனின் ஆரம்பத்தில் தாங்கியிலிருந்த நீரின் கனவளவு யாது? ……...

19. 20 பழங்கள் வீதமுள்ள 5 பெட்டிகளும் 30 பழங்கள் வீதமுள்ள 6 பெட்டிகளும் உள்ளன. அந்தப் பதினொரு பெட்டிகளிலுமுள்ள பழங்களின் எண்ணிக்கை யாது? ……

20. 

அருகிலுள்ள உருவின் சுற்றளவு யாது? ……...

21. ஒருவர் தன்னிடமுள்ள குறித்த தொகைப்பணத்தில் 1/3 பகுதியை உணவுத் தேவைக்கும் எஞ்சியதன் அரைப்பகுதியை வீட்டு வாடகை, மின்கட்டணம், போக்குவரத்து ஆகிய தேவைகளுக்கும் செலவிட்ட பின்னர் எஞ்சியதன் அரைப்பகுதியை தனது அன்றாட செலவுக்கும் மிகுதி ரூபா. 5000.00ஐ தனது சேமிப்பாக வங்கியிலும் வைப்பிலிட்டார் எனின் தொடக்கத்தில் அவரிடமிருந்த பணத்தின் பெறுமதி யாது? ……

22. பொருட்கள் வாங்குவதற்காக கடைக்குச் சென்ற குமரன் 1kg ரூபா 80.000 விலையுடைய அரிசியில் 3kg உம் ஒன்று ரூபா 24.00 விலையுடைய சவக்காரத்தில் 6 உம் வாங்கிய பின்னர் ரூபா 500.00 ஐ கடைக்காரரிடம் கொடுக்கும் போது குமரனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ……..

23. 450g நிறையுடைய பெட்டி ஒன்றில் 400g நிறையுடைய 8 அங்கர் பெட்டிகளும் 150g நிறையுடைய 8 தேயிலைப் பைக்கற்றுக்களும் 750g நிறையுடைய 4 சீனி பைக்கற்றுகளும் வைக்கப்பட்டு பொதியாக்கப்பட்டன. தற்போது பெட்டியின் முழு நிறை யாது? ……


24. முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமான பரீட்சையொன்று 2 மணித்தியாலங்கள் நடைபெற்று 30 நிமிட இடைவேளையின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகி 1 மணி 45 நிமிடங்கள் வரை நடைபெற்று நிறைவடைந்தது எனின் பரீட்சை நிறைவடைந்த நேரத்தை நியம நேரத்தில் தருக? ……

25. தினமும் வேளை ஒன்றிற்கு ஒரு தேக்கரண்டி வீதம் 3 வேளை பாணி மருந்தை உட்கொள்ளும் நோயாளி ஒருவர் ஒரு வாரத்திற்கு இம் மருந்தை உட்கொள்ளும் போது தேவைப்படும் மருந்தின் கனவளவு யாது? ……

www.ipl.edu.lk

கீழுள்ள அட்டவணை, வரைபை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

பழங்கள்	மாணவர் எண்ணிக்கை
மா	12
வாழை	
தோடை	08
கொய்யா	10
அன்னாசி	



26. அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

27. வரைபிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

	திண்ம உரு	முகங்களின் எண்ணிக்கை	உச்சிகளின் எண்ணிக்கை	விளிம்பகளின் எண்ணிக்கை
28	**கூம்பகம்**	**5**		
29	**அரியம்**	**5**		

30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக

30. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு கொடுப்பதற்கு உகந்த உணவு எது?

I. நூடில்ஸ் II. பாண் III. கௌபி

31. சந்தேகத்திற்கு இடமான ஏதாவது ஒன்றை கண்டால் அறிவிக்க வேண்டிய அவசர தொடலைபேசி இலக்கம்.

I. 119 II. 1919 III. 147

32. ஈர்க்குத் தடியில் காணப்படும் ஈர்க்குகள் பெறப்படும் தாவரம்

I. தென்னை II. பனை III. மடுப்பனை

33. சீகிரியா ஓவியத்தை ஒத்த ஓவியமாக வெளிநாட்டில் காணப்படும் சித்திரத்தின் பெயர் யாது?

I. மோனாலிஸா ஓவியம் II. அஜந்தா ஓவியம் III. கிளியோபட்ரா ஓவியம்

34. சவர்க்காரம் செய்வதற்கு பயன்படும் மூலிகைத் தாவரம் அடங்கிய கூட்டம்,

I. தாமரை, அல்லி II. கற்றாளை, வேம்பு III. கற்றாளை, அல்லி

35. பழத்திற்கு வெளியே வித்து காணப்படும் தாவரம் எது?

I. பப்பாசி II. தேங்காய் III. மரமுந்திரிகை

36. நீரூடன் கலக்கும் போது வெப்பமடையும் பொருள் எது?

I. பெற்றோல் II. மண்ணெண்ணெய் III. சுண்ணாம்பு

37.  உருவில் காணப்படுவது

I. சீகிரியா II. யாப்பஹுவ III. சிவனொளிபாதமலை


www.ikeau.lk

38. நாயின் மூலம் பரவக் கூடிய நோய்

I. நீர்வெறுப்பு II. மலேரியா III. பிளேக்

39. சோழ மன்னனான எல்லாளனைக் கொன்று அநுராதபுரத்தைக் கைப்பற்றி இலங்கையை ஒற்றுமைப்படுத்திய மன்னன் யார்?

I. தேசநம்பிய தீசன் II. துட்டகைமுனு III. வசபன்

40. 

இவ் உபகரணத்தின் பயன்பாடு

I. காற்றின் வேகத்தை அறிதல்

II. காற்று வீசும் திசையை அறிதல்

III. வெப்பநிலையை அளவிடல்

41. நெற்பயிர்ச் செய்கையின் போது பயன்படுத்தப்படும் உபகரணம் அல்லாதது,

I. கலப்பை II. முள்ளுக்கரண்டி III. பரப்புப் பலகை

42. உப்பு வேகமாக கரையக் கூடியது எந்நீரில் ஆகும்.

I. வெந்நீரில் II. குளிர் நீர் III. தண்ணீரில்

43. சூரியனுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கோள் எது?

I. புதன் II. வியாழன் III. புவி

44. இலங்கை கிரிக்கெட் அணி உலகக்கிண்ணத்தை சுவீகரித்த ஆண்டு எது?

I. 1997 II. 1996 III. 2011

45. இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட அதிவேக வீதி எது?

I. கொழும்பு – கண்டி அதிவேக வீதி II. கட்டுநாயக்க அதிவேக வீதி

III. தெற்கு அதிவேக வீதி

46. வானவில்லில் காணப்படக்கூடிய மூன்று நிறங்களைக் கொண்ட விடை எது?

I. மஞ்சள், கபிலம், நீலம் II. பச்சை, நீலம், மஞ்சள்

III. வெள்ளை, பச்சை, சிவப்பு

47. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு எது?


I. நீலப்புள் II. நாகணவாய் III. கருங்குரங்கு

48. பதிவுத் தபால் ஒன்றை அனுப்புவதற்கான கட்டணம் எவ்வளவு?

I. ரூ. 15.00 II. ரூ. 40.00 III. ரூ. 45.00

49. புளி கலந்த உணவில் உதிகமாக இருப்பது எது?

I. விற்றமின் C II. விற்றமின் A III. விற்றமின் D

50. 

உருவில் காணப்படும் உபகரணத்தை பயன்படுத்தும் தொழிலாளர் யார்?

I. கொத்தன் II. தச்சன் III. குயவன்

51. மன்னம்பிட்டிய பாலம் காணப்படும் நாணயத்தாள் எது?

I. 50 ரூபாய் நாணயத்தாள் II. 100 ரூபாய் நாணயத்தாள்

III. 1000 ரூபாய் நாணயத்தாள்

52. கொரோனா ஒழிப்பு தொடர்பில் அதிக ஈடுபாடு காட்டும் நிறுவனம்

I. பிரதேச செயலகம் II. பிரதேச சுகாதார சேவை அலுவலகம் III. பிரதேச சபை

www.lkedu.lk

53. குழு விளையாட்டில் இருக்கக் கூடாத பண்பு எது?

I. தலைமத்துவத்திற்கு கட்டுப்படுதல்

II. வெற்றி தோல்வியை சகித்து ஏனையோருடன் ஒன்றாக விளையாடுதல்

III. தனக்கு விரும்பியவாறு செயற்படுதல்.

54. சிவனொளிபாதமலை அமையப் பெற்றுள்ள மாகாணத்தில் அமைந்துள்ள மற்றுமோர் மாவட்டம் எது?

I. கேகாலை II. மாத்தளை III. பதுளை

55. வீட்டுச் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மை ஒன்று

I. அசுத்தமான சூழல் உருவாகும் II. நேரவிரயம் ஏற்படும்

III. சுத்தமான சூழல் ஏற்படும்

56. பள்ளிவாசலுக்கு சென்று வழிபடும் மக்கள் கொண்டாடும் பண்டிகை அல்லாதது

I. ஹஜ் பெருநாள் II. தீபாவளி III. நோன்புப்பெருநாள்

57. தாதுசேனன் மன்னனால் கட்டப்பட்ட ஒன்று அல்லாதது

I. கலாவாவி II. எலஹர கால்வாய் III. மின்னேரியா குளம்

58. அரச மருந்து கூட்டுதாபனத்தை குறிப்பது

I. லக்சல II. ஒசுசல III. சலுசல

59. போக்குவரத்தின் போது பாதுகாப்பற்ற சந்தர்ப்பம்

I. மழைகாலங்களில் பஸ்ஸில் பயணித்தல்

II. காற்று பலமாக வீசும் போது மீனவர்கள் கடலுக்கு செல்லல்

III. பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தல்

(30x1 = 30புள்ளிகள்)

60. ‘‘எனது பாடசாலையில் நடைபெற்ற ஓவிய கண்காட்சி’’ எனும் தலைப்பில் 03 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 05 சொற்கள் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பு என்பனவும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

……....

……....

……....

……....

……....

……....

(06 புள்ளிகள்)

www.ikedu.lk